**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 58/2021 |
| Name | : Balasurbamaniam |
| P.W. | : 4 |
| Father Name | : Kalimuthu |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **22.01.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது ரெட்டிபாளையத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். 2021ம் வருடம் ஏப்ரல் மாதம் தேதி ஞாபகம் இல்லை காலை நேரம் எனது உறவினர் பாலதண்டபாணிக்கு விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனைக்கு சென்றுவிட்டு மடத்துக்குளம் வந்த போது சம்பவ இடத்தில் போலீசார் விசாரித்துக்கொண்டிந்தார்கள். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு காலை 09.00 –09.30 மணியளவில் சென்றேன். அங்கிருந்து சுமார் 10 மணி அளவில் மடத்துக்குளத்திற்கு

வந்தேன். போலீசார் என்னை எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் சுமார் 10.15 மணிக்கு விசாரித்தார்கள். பாலதண்டபாணி எனது உறவினர். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல விபத்து சம்மந்தமாக எழுதியிருந்தது. இறந்து போனவர் எனது உறவினர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்காக என்ன எழுதியிருந்து என்ற விவரம் தெரியாமல் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.01.22 17:07:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்